உ

முருகக்கடவுள் துணை.


தென்னாற்காடு ஜில்லாவில்

வீராநத்தம் ஏரி ஒடைப்பு

வெள்ளத்தால் மடிந்த

விபரீத சிந்து.

1-2-ம் பாகம் அடங்கியது



விஜயபுறம் நா, சபாபதிப்பிள்ளையால்

இயற்றியதை

T. N. ராமுடு & கம்பெனியாரால்,

தஞ்சாவூர்

ஸ்ரீ ராமாநுஜவிலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] **1913** [பைசா [illegible].

உ

சிவமயம்.

முருகக்கடவுள் துணை.

தென்னாற்காடு ஜில்லாவில்

வெள்ளத்தால் மடிந்த விபரீதச்சிந்து.

விநாயகர் துதி வெண்பா.

மதகரியின் முகமுடைய வள்ளலே எந்தனுக்கு
சதங்கை பெற்பாதமதை தந்தருள்வாய்—பதங்கமுடன்
வெள்ளத்தின் விந்தைதனை மேதினியோர் வாசிக்க
கள்ளவிழ் பூம்பாதமலர் காப்பு

பல்லவி.

விந்தையைப்பாரீர் வெள்ளத்தால் நேர்ந்திட்ட
விபரீதம் கேளீர்

அனுபல்லவி.

விந்தைஎன்றால் விந்தை வீடுமுதல் இழந்து
அந்தகனுக்கொப்பாக அடித்த மழையின் விந்தை (விந்)

சரணங்கள்.

ஆயிரத்தொள்ளாயிரம்
ஆனதோர்நவம்பர்மாசம்
தாரதன்மியமின்றி
ஜாடாவாய் கிரியங்கள்

ஆண்டோபதிமூன்று
பத்தாந்தேதி
பெய்த்த மழை வெள்ளத்தால்
தண்ணீர்பெருக்கமாகி

உயிர்துறந்தாராம்—பெண்பிள்ளைகளெல்லாம்
அயர்ந்திருந்தாரும் அப்போ

நாயகனைக்கட்டி
நாடிகுழந்தைகள்
கூடிஜலவெள்ளத்தால்
குலையகெவர்மெண்டார்

மங்கைமார்அணைப்பதும்
தகப்பனைஅணைப்பதும்
கூட்டோடேமிதந்ததும்
குமிப்பாகஎடுத்ததும்

கொள்ளைஎன்பாரும்—பாவிவருணன்செய்த
குற்றமென்பாரும் இன்னும்

தப்பிப்பிழைத்தவர்க்கு சாப்பாடும் இல்லாமல்
தவித்து தண்ணீர் மத்தியில் இளைப்புற்றிருக்கும்போது
எத்திசைபுகழ்பெற்ற தில்லைதீட்சதர்கூட்டம்
ஏராள தர்மத்தை தானாகவேசெய்து

எல்லார்க்குமளித்தார் — அன்னபானந்தினை
எவர்கட்கும் கொடுத்தார் அய்யோ

இப்படியாகிய தர்மத்தை நடத்தியும்
ஏராளமான உடைகள்கொடுத்துமே
தப்பிழைத்தோர்க்கு தயிரியம்கூறியும்
தாராளமா உதவிகள்செய்துமே

தாமிருந்தாரும் — சபாபதிசன்னிதி
யோல்இருந்தாரும் அய்யோ

ஆறுகுளங்களெல்லாம் அலைகடல்போலாச்சு
அங்குள்ள ஏரிகள் அடங்கலும்ஒன்றாச்சு
பாரில்அசந்தவர்கள் பாவம்பிணமாய்போச்சு
பாவையும்மக்களும் பரமபதமேஆச்சு

அலங்கோலமாச்சு — ஆடுமாடுகளெல்லாம்
அடியோடேபோச்சு இன்னும்

அவரவர்பெட்டியில் இருந்ததனங்கள்போச்சு
அய்யய்யோபெரியோரால் தேடினமனைபோச்சு
மாடிமெத்தைவீடுகள் மலைபோலவிழலாச்சு
மன்னர்கலெக்டர் துரை வந்துஉதிக்கலாச்சு

ஜெயம்பெற்றோர்ஜனங்கள் — துரையின் முகத்தைக்கண்டு
பயமற்றார்சிலர்கள் இப்போ

கோடான கோடிஜனம் கூடினார்துரையிடம்
கூட்டத்தின்பரிதாபம் பார்த்தார்கலெக்டர்துரை
தானாகவேநேரில் சென்றுதந்திஆபீசில்
தவிக்கும்ஜனங்களுக்கு சன்மானம்செய்யென்று

கொடுத்தாரேதந்தி — டிவிஷனல்ஆபீசுக்கு
விடுத்தாரேமுத்தி விடுத்து

வெள்ளப்பெருக்கை வேணஉதவிசெய்தும்
னங்களுக்கு கண்ணால்கண்டுமேதிகலங்கி

எடுத்துப்பணத்தை இங்கு இருக்கும் ஏழைகட்கீந்துட்
எல்லார்க்கும் தைரியம் உல்லாசமாய்ச்சொல்லி

ஏகினார் ஆபீஸ்—வெள்ளத்தைத் தடுக்க
மேவினார் அப்போ

சிதம்பரம்தாலுக்கா இருப்பார் கடலாச்சு
தேவர்கள் அமிர்தம் கடைந்த இடம்போலாச்சு
மிதப்பாய் அதனில்வரும் வீடுமடமருமாச்சு
மேதினியில் உள்ளோர்கள் ஏறும்கப்பலுமாச்சு

வருகுதுபாரு—வைக்கப்போர் முதல்கொண்டு
ஏகுதுபாரு இன்னும்

வைக்கப்போர்வெள்ளத்தில் வருகுதுமலைபோல்
வண்டிமாடுகள் எல்லாம் விண்டிட ஜலந்தனில்
அக்கம்பக்கம்உள்ளோர் அதுமேல்தொற்றிக்கொள்ள
அய்யய்யோ பாலர்கள் அனைவரும் இறந்திட

போகுதே வெள்ளம்—மஞ்சகுப்பம்ஜில்லாவில்
பெருகுதே இன்னம் இப்போ

செஞ்சொல்மிகசிறந்த மஞ்சகுப்பம்ஜில்லாவில்
செழிப்பானகூடலூர் டவுனும்வில்லேஜும்கூட
பஞ்சைகுடியிருக்கும் வீதிகள்முதல்கொண்டு
பகவான்கருணையாலே பாற்கடல்போலாச்சு

பாவத்தைப்பாரீர்—இருக்க இடமில்லாத
பரிதாபம்பாரீர்

வீடுவாசல்கள்எல்லாம் வேணதா இடிந்துபோச்சு
வில்லர்பயில்வான்களும் வீங்கிமிதக்கலானார்
பாரிஷ்டவுன்முழுதும் இருபத்திரெண்டிஞ்சல்தண்ணீர்
பறவைகளுடனே பார்க்கபயங்கரமாய்

தோற்றமே ஆகி—கடலுக்கும் டவுனுக்கும்
ஏற்றமாகி மாற்றும்

அடித்த அலைபயத்தால் அய்யோ திகில்உண்டாச்சு
அப்பனும்பிள்ளையும் அலைந்துமிதக்கலாச்சு

எடுத்தபிணக்குவியல் டவுனெங்கு நிறைந்துபோச்சு
எல்லாரும்ஒன்றுகூடி எங்கேபுதைக்கலாச்சு

குடிகெட்டுப்போச்சு—கூடலூர்முழுமையும்
பதிவிடலாச்சு (விருத்,)

நொண்டிச்சிந்து.

உலகினில் வாசிகளே—வெள்ளமதை—உரைக்கிறேன் காதி
னால் கேட்டிடுங்கள்—ஜலமதின் பிரவாகம்—கூடலூரில்—டவுனெல்
லாம் வெள்ளமாகி தவித்துநிற்க—மழையினால்வந்த கேடென்பார்—
சிலர்கள்—வருணனுக்கேது பிழைசெய்தோமென்பார்— பட்டிகள்
பாளாச்சு—அங்குஉள்ளபசுமுதல்உள்ளஜெந்தும்பாழ்ந்துபோச்சு—வீடு
கள் மறைந்துபோச்சு—விதிவசம் விட்டதோ தேவர்முதல் யாவரையு
ம்—சொன்னேன்—மாண்டஜனத்தின்மதிப்பை—கூற்றுவனும் வாய்
விட்டுரைக்கவுமே மதிப்பும் இல்லை தாய்பிள்ளை தகப்பனுடன்—பந்
துக்களுமே— தத்தளித்துவெள்ளமதில் மிதக்கலுற்றார்—மாய்கை
போல்பறந்துவரும்—ரயில்வே—லயன்மார்க்கமிருக்கும்—இடத்தை
பார்க்கவும்காணோம்இதுவென்ன—விபரீதம்–டிரயின்கள்வந்து– ஏக
வழியில்லாமல் போகவேயில்லை—வண்டியில்—உள்ளபேர்களும் மற
றுமுள்ளமாந்தர்முதல்—யாவர்களும் மயங்கினார்கள் பட்டினி ஆனா
ர்கள் டிரயனில்உள்ளோர்—பாலகரைவைத்துமிக—பறதவித்தாரெ
ப்படிபிழைப்போம்என்பார்எல்லோரும் ஏகோபமாக கூடிவிசனமுற்
றார், (தெர்)

கும்மி,

மாமயில்போல் நடையழகிபெண்ணே
 வாலப்பிராய மயிலழகி
தாமதமின்றியே கூடலூர்வெள்ளத்தின்
 சங்கதிசொல்கிறேன் கேளுங்கடி

கும்மியடியும் சிறுவர்களாநீங்கள்
 கூச்சமின்றி நின்றுகொண்டு

செம்மையதாகவே வெள்ளப்பிற
தெரிந்துகும்மி அடியுங்கடி 2

பூரணதியது புண்யதீர்த்தமடி
பாவையரே அது கொள்ளடமாம்
மேவிகதிதனில் வெள்ளப்பிறவாகத்தால்
விளைந்துகெடுதலைக் காணுங்கடி 3

தென்னிந்தியா ரயில்வே கம்பெனியார்கள்
சென்றுபோகும்வழி மார்க்கமடி
தன்னிய ராஜப துரைமார்களெல்லாம்
கண்டுகொள்ளுவழி தீர்க்கமடி 4

சென்னையைவிட்டு தூத்துக்குடிசெல்லும்
சீரானபோட்மெயில் எக்சுபிறசும்
உன்னதமாகிய தர்கூட்சம்செட்டிலும்
உகந்துஓடும்வழி மார்க்கமடி 5

கொள்ளடம்முதல் கூடலூர்வரையில்
கோடானகோடி உடைப்பாகி
இன்னபின்னமாக ரயில்வேலயன்கள்
சீர்குலைந்ததை பாருங்கடி 6

ராவணன்சீதையை பூமியுடன்பேர்த்த
ஞாயம்போல்வர்ணன் ரயில்வேலயனை
சாபனைபோல்லயன் ஒன்றும்தெரியாமல்
சக்கைவாராய் வீணாய்போனதுவே 7

இப்படியாகவே உடைப்புவெள்ளத்தால்
இருந்த கேட்டைகள் தான்போயும்
துப்படிகூட இடமில்லாமல் லயன்
சந்திக்கதைபோல் ஆனதுவே 8

ஆகியலயன்கள் டேஞ்சராய்ஆகி
அபாயநிலையில் இருக்கையிலே
கூவியேபோட்மெயில் தேவவிமானம்போல்
கோடையிடிபோல் வருகுதடி 9

வருகிறபோது பயர்மேனும்டிறைவரும்
வழிதெரியாமல் பிறவாகம்என்று

ருகவே இஞ்சின் விசையைத் திருப்பி
கொண்டிவந்தார் மெள்ளவிண்டுவெந்தார் 10

வந்ததோர்வண்டியை தானிறுத்தி அவர்
வாகாகநேர்நோக்கி பார்க்கயிலே
கொண்டல்வண்ணன்பள்ளி கொண்டகடல்போல்
கோரப்பயமாய் இருந்ததடி 11

இருந்தவுடனே டிரைவர்பயர்மேனும்
ஈரோப்பியன் கார்டு துரைகளுமே
சரிந்துவிழுகும் லயனின் அபாயத்தை
சற்றுகண்நோக்கி பார்க்கலுற்றார் 12

போகவழியது இல்லைகண்டோம்நாங்கள்
போவது திரும்பி யுத்தமென்று
சாகபோனோர்கள் பிழைத்தோமென்றுன்னி
தட்டினார்வண்டியை பின்னோக்கி 13

நோக்கியேபின்னாள் பார்க்கையிலேவெள்ளம்
நொங்கும் நுரையாய் போவதினால்
பாக்கியம்காம்செய்த திவ்வளவுதானென்று
பரற்குறலுற்றழுகலுற்றார் 14

ருழேல்பறம்போக பர்மபனூர்வந்து
நடுவேகுருக்கிட்ட மாதிரியாய்
தாமேயோசித்த என்னம்மாளாமல்
தவித்து அழுவதை என்சொல்வேன் 15

கடவுள்போல் இங்கிலீஷ்ராஜாங்கத்தார்கள்
கண்டுமேவெள்ள பிரவாகமதை
பட்டுகொண்டுபோய் கரைகொண்டுசேர்த்திட
பட்டகஷ்டங்கள் ரொம்பவுண்டாம் 16

இந்தமட்டில்கண்ட காட்சிசொன்னேனான்
இனி மூன்றும்பாகம் வரும்மானிலத்தில்
கண்டகதையெல்லாம் அப்போது சொல்கிறேன்
கானமயில்ஒத்த மான்முகி 17

இன்னிலம்தன்னிலே வியாதிகட்குமன்
எங்கள்புதுவை கண்ணியப்பர்
தின்னியர்பாதத்தை முன்னிட்டுபாடினேன்
சித்தமகிழ்ந்து பிழைபொறுப்பீர் 18

தாசன்சபாபதி பாடியபாடல்கள்
தரணிஉள்ளோர்மட்டும் தான்வழங்க
ஈசன்கிருபையால் என்றைக்கும்மென்மேலாய்
இருந்துதமிழை பொழிந்திடவே 19

வெள்ளத்தால் மடிந்தவிபரீத சிந்து

முற்றிற்று

